# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2040 (ஆனி-ஆடி) ஜூலை 2009 ஏர்-24, உழவு-7, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
கே.ஆர்.பி.மோகன்
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744

## கொங்கு நண்பர்கள் சங்கம்

"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351244
28352744

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
28353214
Fax : 044-42663650

| | |
|---|---|
| தலைவர் | : கே.ஆர்.பி.மோகன் |
| துணைத்தலைவர் | : ஈ.ஆர்.ஈஸ்வரன்<br>பி.சென்னியப்பன் |
| செயலாளர் | : பரணி கே. பாலசுப்பிரமணி |
| இணைச்செயலாளர் | : எஸ்.ஆர்.இராஜேந்திரன்<br>கே.சி.பிரபாகரன் |
| பொருளாளர் | : ஆர். செல்வராஜ் |
| தணிக்கையாளர் | : ஆர். பாலச்சந்திரன் |

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| எம். பொன்னுசாமி | கே.கந்தசாமி |
| கே.ஏ.கணபதி | பி.ரவி |
| கே.ராஜாமணி | பி.இராமசாமி |
| வி.பி.செங்கோட்டுவேல் | பி.கே.ஈஸ்வரமூர்த்தி |
| ஆர். சண்முகவேல் | Dr.டி.எஸ்.செல்வராஜ் |
| மு. கார்த்திக் | Dr.எஸ்.அசோகன் |
| கே.கே. ரமேஷ் | N.பாலசுப்பிரமணியம் |
| ஜெ.ஆனந்த் | பி.அருள் |
| வி.பி.வீரப்பன் | எஸ்.சிவசாமி |
| ஆர்.இளங்கோ | Dr.மணிமேகலை புஷ்பராஜ் |
| கே. வரதராஜன் | உத்தமி பொன்னுசாமி |

## இந்த இதழில்

| | |
|---|---|
| பொருளடக்கம் | - 1 |
| நன்கொடை பட்டியல் | - 2 |
| உலக மக்கள் தொகை | - 3 |
| பழகுதல் | - 5 |
| மொர்ச்சண்ட் நேவி, ஏவியேஷன் | - 9 |
| மேனேஜ்மெண்ட் | - 12 |
| உறவுகள் மேம்பட..... | - 14 |
| திருமண மாலை | - 15 |
| வாழ்த்துகிறோம் | - 16 |
| யாவரும் கேளிர் | - 17 |
| வருந்துகிறோம் | - 19 |
| வாழ்த்துகிறோம் | - 20 |
| வாழ்த்துகிறோம் | - 21 |
| வாழ்த்துகிறோம் | - 22 |
| நூல் நயம் | - 23 |
| வாழ்த்துகிறோம் | - 24 |
| மணமகள் தேவை | - 25 |
| மணமகன் தேவை | - 28 |
| திருத்தம் | - 32 |

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு - கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டிட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | ஊர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | | 27,23,430 |
| 645 | 1195 | N.குழந்தைசாமி | ஈரோடு | 14,000 |
| 646 | | ரகு | ஈரோடு | 5,000 |
| 647 | | V.செந்தில் | ஈரோடு | 5,000 |
| 648 | | ராமசாமி | ஈரோடு | 1,000 |
| 649 | L.H | E.சர்மிளா தேவி | கரூர் | 1,000 |
| 650 | L.H | K.அனுதிவ்யா | பொள்ளாச்சி | 1,000 |
| 651 | 0148 | M.S.சுப்ரமணியம் | ஊத்தங்கரை | 1,000 |
| 652 | 0149 | V.கருணாகரன் | தருமபுரி | 1,000 |
| 653 | L.H. | T.வினுபிரியங்கா | தருமபுரி | 1,000 |
| 654 | L.H. | G.கிருபாலட்சுமி | பொள்ளாச்சி | 1,000 |
| 655 | L.H. | B.தீபா | நாமக்கல் | 1,000 |
| 656 | G.H | K.V.K.பிரதீவ் | ஈரோடு | 1,000 |
| 657 | 812 | K.சுந்தரம் | சேலம் | 1,000 |
| 658 | | K.முத்துசாமி | நாமக்கல் | 1,000 |
| 659 | 1687 | P.மோகன் | நாமக்கல் | 1,000 |
| 660 | L.H | K.மதியரசி | | 1,000 |
| 661 | G.H | ராஜசேகரன் | நாமக்கல் | 1,000 |
| 662 | G.H. | பிரதீப் | ஈரோடு | 1,000 |
| 663 | 725 | S.R.சுப்பிரமணியன் | சென்னை | 1,000 |
| | | மொத்தம் | | 27,63,430 |

# உலக மக்கள் தொகை

ஏசு கிருஸ்து பிறப்பதற்கு சுமார் 4000 வருடங்களுக்கு முன்பே மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

- பாபிலோனியாவில் மக்களின் வருவாய் அடிப்படையில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பே உலகின் முதல் கணக்கெடுப்பாகக் கருதப்படுகிறது.
- கிருஸ்து வருடத்துவக்கத்தில் உலக மக்கள் தொகை 20-40 கோடியாகவே இருந்ததாம்.
- இக்காலகட்டத்தில் பிறப்பு விகிதம் அதிகமாக இருந்தபோதிலும், மக்கள் தொகை அதிகரிக்கவில்லை. காரணம் மிக அதிகமான இறப்பு விகிதம். இயற்கைப் பேரழிவுகள், தொற்று நோய்கள், போர்கள், உணவுப் பற்றாக்குறை போன்றவற்றால் இக்காலகட்டத்தில் குழந்தை இறப்பு விகிதமும் மிக அதிகமாகவே இருந்தது.
- 1950 களுக்குப் பின்புதான் மக்கள் தொகைப் பெருக்கத்தில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டது. நவீன அறிவியல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி, மக்களின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்ட மேம்பாடு, தொற்று நோய்கள், இயற்கைப் பேரழிவுகள் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதில் விழிப்புணர்வு போன்றவை இதற்கான அடிப்படைக் காரணங்கள்.

**மக்கள் தொகை சில தகவல்கள்**

- மக்கள் தொகை பெரு வெடிப்புக்குறித்து முதன் முதலாகக் கருத்து வெளியிட்டவர் பிரிட்டனைச் சேர்ந்த பொருளாதார நிபுணர் தாமஸ் ராபர்ட் மால்த்தூஸ் என்பவரே.
- மக்கள் தொகையின் அளவு, பரவல், போக்கு போன்றவற்றைக் குறித்த படிப்பு டெமோகிராஃபி (Demography) எனப்படுகிறது.
- ஒரு நாட்டின் பிறப்பு, இறப்பு விகிதங்கள் சமமாக இருக்கும் நிலைக்கு Zero Population Growth என்று பெயர்.
- ஐ.நா.சபை வருடந்தோறும் மக்கள் தொகை இயர்புக் ஒன்றை வெளியிட்டு வருகிறது.
- இந்தியாவின் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு 1881 இல் நிகழ்ந்தது ரிப்பன் பிரபுவின் காலத்தில். அன்று தொடங்கி ஒவ்வொரு பத்து வருடத்திற்கு ஒருமுறை மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது.

### மக்கள் தொகைப் பெருக்கம்

உலகில் ஒவ்வொரு ஆறு வினாடியிலும் 17 குழந்தைகள் பிறக்கின்றனவாம். உலக மக்கள் தொகை பெருக்கத்தின் 95 சதவிகிதமும் வறுமை பீடித்த நாடுகளிலேயே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

- பிறப்பு விகிதம் அதிகமுள்ள நாடுகள் : நைஜர் - 50.73%, மாலி-49.82%, உகாண்டா– 47.35%, ஆப்கானிஸ்தான் – 46.60
- பிறப்பு விகிதம் குறைந்த நாடுகள் : ஐரோப்பா, வட அமெரிக்கா, முன்னாள் சோவியத் குடியரசு, ஓஷானியா
- இறப்பு விகிதம் அதிகமுள்ள நாடுகள் : சாம்பியா, போட்ஸ்வானா, லெஸோதோ, அங்கோலா, லைப்பீரியா

### மக்கள் தொகை அதிகரித்தால்

வேலையின்மை, உணவுப் பற்றாக்குறை, சுத்தமான குடிநீர் தட்டுப்பாடு, சுற்றுச்சூழல் சீர்கேடு, காடுகள் அழிப்பு போன்றவற்றால் ஏற்படும் வாழ்க்கைச் சீர்கேடுகள் அதிகரிப்பது. இதன் விளைவுகளான நோய், வறுமை, எழுத்தறிவின்மை, அறிவின்மை போன்றவை மக்களை, தொடர்ந்து பின்தங்கிய நிலையிலேயே வைத்திருக்கும்.

### உலக மக்கள் தொகை விவரம்

1987 ஜூலை 11 ஆம் தேதி உலக மக்கள் தொகை 500 கோடியை எட்டியது. இந்த நினைவைப் போற்றும் விதத்தில் எல்லா வருடமும் ஜூலை மாதம் 11 ஆம் தேதியை உலக மக்கள் தொகை தினமாகக் கடைப்பிடிக்கிறது ஐ.நா. சபை. 1987 ஜூலை 11 இல் குரோஷியாவில் பிறந்த மதேஜ் காஸ்பர் எனும் குழந்தையே உலக மக்கள் தொகையை 500 கோடியாக்கிய குழந்தையாகக் கருதப்படுகிறது. இன்றைய நிலையில் உலக மக்கள்தொகை 660 கோடியைத் தாண்டிவிட்டது.

| மிகக் குறைந்த மக்கள் தொகை கொண்ட பத்து நாடுகள் | | மிக அதிகம் மக்கள் தொகை கொண்ட பத்து நாடுகள் | |
|---|---|---|---|
| வாடிகன் | 821 | சீனா | 132,18,51,888 |
| தூவலு | 11,992 | இந்தியா | 112,98,66,154 |
| நௌரு | 13,528 | அமெரிக்கா | 30,11,39,947 |
| பலாவ் | 20,842 | இந்தோனேசியா | 23,46,93,997 |
| சான் மரினோ | 29,615 | பிரேசில் | 19,00,10,647 |
| மொனாக்கோ | 32,671 | பாகிஸ்தான் | 16,47,41,924 |
| லிச்டென்ஸ்டெயின் | 34,247 | பங்களாதேசம் | 15,04,48,339 |
| செ.கிட்ஸ் நெருவிஸ் | 39,349 | ருஷ்யா | 14,13,77,752 |
| மார்ஷல் தீவுகள் | 61,815 | நைஜீரியா | 13,50,31,164 |
| ஆன்டிகுவா-பார்புடா | 69,481 | ஜப்பான் | 12,74,33,494 |

நன்றி : மனோரமா இயர்புக் 2009

# உடன்பிறந்தவர்களுடன் பழகுதல்

– பத்மபூஷன் பெ.தூரன்

**உ**டன் பிறந்தவர்களிடையே ஆழ்ந்த அன்பு இருக்கிறது. இதை உடன் பிறப்பு என்னும் பாசம் என்கிறோம்; ‘தான் ஆடாவிடினும் தன் சதை ஆடும்’ என்கிறோம். ஆனால், அதே சமயத்தில் உடன்பிறந்தவர்களிடையே பொறாமை, பகைமை முதலிய குணங்கள் இருப்பதையும் காண்கிறோம். இவற்றிற் கெல்லாம் என்ன காரணம்? அன்பு உண்டாவதற்கும், பொறாமையோ பகைமையோ உண்டாவதற்கும் குழந்தைகளை வளர்க்கும் பெற்றோர்கள் எவ்வகையிலாவது காரணமாக இருக்கிறார்களா? என்று ஆராய வேண்டும்.

குழந்தை தனக்கு உதவி செய்பவர்களிடம் அன்பு கொள்கிறது. தாய் போஷிக்கிறாள், பாதுகாக்கிறாள், வேண்டியதைச் செய்கிறாள். அவளிடம் குழந்தைக்கு அன்பு ஏற்படுகிறது. அதேபோல ஒரே வீட்டில் வளரும் குழந்தைகள் ஒன்றுக்கொன்று பல வகைகளில் உபகாரமாக இருக்கின்றன. ஒன்றுடன் ஒன்று அதிகம் நெருங்கிப்பழகுகிறது. ஆபத்துக்காலத்தில் துணையாக இருக்கிறது. அதனால் இயல்பாகவே ஆழ்ந்த அன்பு ஏற்படுகிறது. இந்த அன்பைப் பெற்றோர்கள் மேலும் மேலும் வளரும்படி செய்ய முடியும். அதே சமயத்தில், சகோதர சகோதரிகளிடையே குழந்தைப் பருவத்திலேயே பொறாமையும், பகைமையும் உண்டாக்கும்படியும் செய்துவிடக் கூடும். பெற்றோர்கள் தாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும், பேசும் பேச்சிலும் ஜாக்கிரதையாக இல்லாவிட்டால் தம்மை அறியாமலேயே குழந்தைகளுக்குப் பல தீங்குகளைப் பழக்கி விடுவார்கள்.

இரண்டாவது குழந்தை சரோஜா பிறக்கும் வரையில் கண்ணம்மா வெகு நல்ல பெண்ணாக இருந்தாள். சிறு குழந்தைகளைக் கண்டால் , “பாப்பா, பாப்பா” என்று கொஞ்சுவாள், தன் மடியில் வைக்கும்படி சொல்லுவாள்.

ஆனால் இப்பொழுதோ சரோஜா தொட்டிலில் தூங்கினால் கண்ணம்மா யாரும் அறியாமல் அவளைக் கிள்ளிவிட்டு ஓடிவிடுகிறாள். ஒவ்வொரு சமயம் அவளைக் கீழே தள்ளி விடுகிறாள். தாயார் சரோஜாவை மடியில் வைத்திருந்தால் தானும் அங்கே உட்காரவேண்டும் என்று பிடிவாதம் செய்கிறாள்.

“அப்பா, நான்தான் நல்லவள், சரோஜா வேண்டாம், அவளுக்கு மிட்டாய் கொடுக்காதே”, என்கிறாள்.

இப்படி மாறியதற்குக்காரணம் என்ன? கண்ணம்மா தனியாக இருந்தபோது பெற்றோர்களின் அன்பெல்லாம், அவள் மேலேயே இருந்தது. அவளே தாய் தந்தையரின்

அன்புச்சிங்காதனத்திலிருந்து தனி அரசாண்டாள்.

இப்பொழுது தாயின் கவனம் மற்றொரு குழந்தை மேல் செல்கிறது. தாய் சரோஜாவை மடியில் வைத்துப் பால் கொடுக்கிறாள், அன்புவார்த்தைகள் பேசுகிறாள். கண்ணம்மாவுக்குப் பொறாமை உண்டாகிறது. தன்னுடைய ஏகபோக உரிமையில் வேறொருத்தி வந்துவிட்டதை அறிந்து நெஞ்சம் தடுமாறுகிறாள்.

ஒரு நாள் தாய் சரோஜாவுக்குப் பால் கொடுத்துக் கொண்டிருப்பதைக் கண்ணம்மா பார்த்துவிட்டாள். உடனே அவளைத் தள்ளி விட்டுத் தான் மடியில் உட்கார்ந்து கொண்டு பால் குடிக்க விரும்பினாள். ஆனால் அவள் பால் மறந்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. அவள் செய்கை எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

இந்தப் பொறாமைக் தீயை வளர்ப்பதில் பெற்றோர்களும், பந்துக்களும் மற்றவர்களும் பலவிதங்களில் தம்மை அறியாது உதவி செய்கிறார்கள்.

தாய் கண்ணம்மாளுக்குப் பாலன்னம் ஊட்டுகிறாள். அவள் உண்ண மறுத்தால், உடனே, “இந்தா சரோஜா, நீ வா உனக்குக் கொடுக்கிறேன். அக்காவுக்குக் கொடுக்கவில்லை” என்கிறாள் தாய். கண்ணம்மா சட்டென்று சாப்பிட ஆரம்பிக்கிறாள். உணவோடு பொறாமையும் கலந்து செல்கிறது.

“கண்ணம்மா, ஜடைபோட்டுக்கொள்ள மாட்டாயா? சரி புது ரிப்பனை சரோஜாவுக்கு வைத்துவிடுகிறேன். உணக்கில்லை”

“சரோஜா தான் சமர்த்து, நல்ல குழந்தை, நீ மோசம்.”

“கோயிலுக்கு அவளைத்தான் கூட்டிக்கொண்டு போவேன், நீ வேண்டாம்.”

இப்படியெல்லாம் சொல்லி நாம் விரும்பியதைக் குழந்தை செய்யும்படி தூண்டுகிறோம். காரியம் கைகூடுகிறது. ஆனால், குழந்தைகளிடையே பொறாமையும் பகைமையும் உண்டாவதை நாம் கவனிப்பதில்லை.

பல தடவைகளில் இரண்டு குழந்தைகளின் திறமைகளையும் புத்திக்கூர்மையையும் ஒப்பிட்டு வெளிப்படையாக அவர்களை வைத்துக்கொண்டே பேசுகிறோம். பந்துக்களிடம் சொல்லுகிறோம். குழந்தைகள் அவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கின்றன.

பெற்றோர்கள் ஒரு குழந்தையிடம் ஏதாவது ஒரு காரணத்தால் விசேஷ அன்பு காட்டுவதும் உண்டு.அதை மற்ற குழந்தை அறிந்து மனத்திற்குள்ளேயே நலிகிறது.

குழந்தையிடம் அதன் கடமையைப் பற்றியும் சகோதர சகோதரிகளிடத்தில் அன்பு காட்ட வேண்டும் என்பதைப்பற்றியும் உபந்நியாசம் செய்யக்கூடாது. அதைக்

குழந்தை அறிந்து கொள்ளாது. தன்னிடம் உள்ளதை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டுமென்ற நியாயம் அதற்குத் தெரியாது. அதைப்பற்றிப் பிரசங்கம் செய்தால், மற்றவர்களிடம் அதற்கு வெறுப்பு தான் உண்டாகும்.

கண்ணம்மாளும் சரோஜாவும் நடந்துகொள்வதைப்பற்றிய எனது குறிப்புக்களில் மூன்றை இங்கே உதாரணமாகத் தருகிறேன்.

இரண்டு பேருக்கும் பொம்மை வாங்கி வந்தேன். இரண்டும் ஒரே மாதிரி வேண்டாம் என்று நினைத்து வேறு வேறு பொம்மை வாங்கிவிட்டேன். வந்தது ரகளை; ஒன்றே வேண்டுமென்று இருவரும் கேட்டார்கள். ஒரே அழுகை, மற்ற பொம்மையின் அழகையெல்லாம் ஒவ்வொருத்திக்கும் எடுத்துச்சொன்னேன். “இந்தா இதுதான் ரொம்ப நல்லது, நல்ல பாப்பா இது’’ என்று ஆசை காட்டினேன்.

“வேண்டாம் போ; அதுதான் வேணும்” என்று இரண்டு பேரும் ஒரே பதில் கொடுத்தார்கள். இனிமேல் இரண்டுபேருக்கும் ஒரே விதமான பொம்மையோ துணியோ எதுவும் வாங்குவது என்று முடிவு செய்தேன்.

விளையாடுவதற்கு இருவருக்கும் இரு சிறு தொட்டில்கள் உண்டு. ஆனால் இன்று இருவருக்கும் ஒரே தொட்டிலின் மேல் ஆசைவந்துவிட்டது. கூச்சல், கண்ணீர். “இது அவளுடையது, இது என்னுடையது” என்று சொல்லிக்கொண்டிருந்ததெல்லாம் போய் விட்டது. குழந்தை உள்ளங்கள் ஒன்றிலேயே லயித்து விட்டன.

அந்தச் சமயத்தில், “கண்ணம்மா, எனக்கு அந்தக் தட்டத்தை எடுத்துக்கொடுக்கிறாயா? காய் அறுத்து வைக்கலாம்” என்று தாய் கூப்பிட்டாள். கண்ணம்மா தொட்டிலை விட்டுவிட்டு வேகமாக ஓடிவிட்டாள்.

பெரிய குழந்தையை (வயது4½) இந்த மாதிரியான சிறு வேலைகளில் உதவி செய்யும்படி வினயமாகக் கேட்டால் அதற்கு வெகு சந்தோஷம். அம்மாளுக்கு உதவி செய்வதில் அதற்குத் தொட்டிலாட்டுவதைவிட அதிக இன்பம் இருக்கிறது.

“அப்பா எனக்கு புண்ணு, பாரு” என்றாள் சரோஜா.

“அப்பா எனக்கும் புண்ணு” என்று சொல்லிக்கொண்டு வந்தாள் கண்ணம்மா.

“எனக்கு இத்தனை புண்ணு” என்று ஒரு கையை விரித்தாள் இளையவள்.

“எனக்கு இத்தனை புண்ணு” என்று இரண்டு கையையும் விரித்தாள் மூத்தவள்.

இதில்கூட ஒருவருக்கொருவர் தோல்வியடையக் கூடாதாம். தானே உயர்த்தி என்று எதிலும் இருக்கவேண்டுமாம்.

“காலெல்லாம் அழுக்கைப்பாரு. சுத்தமாக இருந்தால் புண்ணே வராது” என்றேன் நான். ஆனால் நான் ஒருத்திபேரிலும் குறை சொல்லவில்லை; பொதுவாகச் சொல்லி நிறுத்திக்கொண்டேன்.

ஒரே மூச்சில் இரண்டும் பேரும், “அப்பா, எனக்குப் புண்ணெல்லாம் ஆறிப்போச்சு, நான் அழுக்கில்லை” என்றார்கள்.

உடன் பிறந்தவர்களுக்குள்ளே பொறாமையும் பகைமையும் உண்டாகாதவாறு பெற்றோர்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவற்றை வளர்க்க எவ்வகையிலும் சந்தர்ப்பம் அளிக்கக்கூடாது. எல்லாக் குழந்தைகளையும் ஒரே மாதிரி அன்போடு நடத்த வேண்டும் . அவர்களைப் பற்றி உயர்வு கொள்ளவும். பரஸ்பரம் உதவிசெய்து கொள்ளவும், மற்றவருடைய சந்தோஷத்தைக் கவனிக்கவும் ஏற்ற மனப்பான்மை அடைய உதவவேண்டும். பெற்றோர்களின் அன்பு புதிதாக வந்த குழந்தையிடமும் செல்லுகிறது என்பதை மெதுவாக அதிர்ச்சியில்லாமல் மூத்த குழந்தை உணரும்படி செய்யவேண்டும்.

சில தாய்மார்கள் கைக்குழந்தைக்கு மூத்த குழந்தையின் முன்னால் பால் கொடுக்கமாட்டார்கள். காரணம் கேட்டால், “பெரியது ஏங்கிப்போகும்” என்பார்கள், இம்மாதிரி ஒவ்வொரு விஷயத்தையும் ஆலோசித்து நடந்தால் குழந்தை, தன் உடன் பிறந்தவர்களிடம் ஆழ்ந்த அன்பு கொள்ள ஏதுவாக இருக்கும்.

வீட்டில் ஒரே குழந்தையாக இருந்தால் அது தன்னையே பெரிதாக எண்ணிக்கொள்கிறது. பெற்றோர்கள் தனக்கு எல்லாக்காரியங்களும் செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறது. பிரியத்தால் பெற்றோர்கள் அப்படிச்செய்கிறார்கள். அதனால் சமூகத்தில் மற்றவர்களுடன் பழகி வாழும்போது சிரமம் ஏற்படுகிறது. பள்ளிக்குப் போனால் எல்லோரும் தன்னையே கவனிக்க வேண்டுமென்று எதிர்ப்பார்த்து ஏமாற்றமடைகிறது. அதனால் வாழ்க்கையில் அது சங்கடப்படுகிறது.

பல குழந்தைகள் ஒரு வீட்டிலிருந்தால் அவை சமூகத்திற்கு அவசியமான பல அனுபவங்களை வீட்டிலேயே பெறுகின்றன. பிறரிடம் அன்பு காட்டுதல், உதவிசெய்தல் முதலியவற்றிலும் பயிற்சியடைகின்றன. இவையெல்லாம் நல்லவையே. அதே சமயத்தில் பொறாமை, பகைமை முதலிய உணர்ச்சிகளும் வராமல் நாம் செய்துவிட முடியுமானால் மிக நல்லதல்லவா?

❖❖❖❖❖

# மெர்ச்சண்ட் நேவி, ஏவியேஷன்

கை நிறைய சம்பளம், வசதியான வாழ்க்கை, அத்துடன் உலகைச் சுற்றிப் பார்க்க அருமையான வாய்ப்பு.இதற்கு களம் அமைக்கிறது மெர்ச்சண்ட் நேவி மற்றும் ஏவியேஷன் படிப்புகள். ஏவியேஷன் துறை தொடர்ந்து வளர்ந்து வரும் துறை. அண்மைக் காலத்தில் தனியார் விமானங்களில் ஆட்குறைப்பு நடவடிக்கைகள் இருந்தாலும்கூட, இவையெல்லாம் தாற்காலிகப் பின்னடைவுதான். பைலட்டுகளுக்கு வெளிநாடுகளிலும் நல்ல வாய்ப்புகள் உள்ளன என்கிறார்கள். விமானப்போக்குவரத்து அதிகரித்து வரும் சூழ்நிலையில் பைலட்டுகளுக்கான தேவை குறைய வாய்ப்பில்லை.

. பிளஸ் டூ வகுப்பில் கணிதம், இயற்பியல் ஆகிய பாடப் பிரிவுகளை எடுத்துப்படித்த மாணவர்கள் பைலட் பயிற்சியில் சேரலாம்.

. தில்லியில் உள்ள விமானப்படை சென்ட்ரல் மெடிக்கல் எஸ்டாபிளிஷ்மென்ட் அல்லது பெங்களூரில் உள்ள இன்ஸ்டிடியுட் ஆஃப் ஏவியேஷன் மெடிஸின் ஆகியவற்றின் மூலம் நடத்தப்படும் மருத்துவப் பரிசோதனையில் மாணவர்கள் முழு உடற்தகுதி பெற வேண்டும்.

. முதல் கட்டமாக எஸ்.பி.எஸ். எனப்படு ஸ்டூடன்ட் பைலட் லைசென்ஸ் வழங்கப்படும். இதையடுத்து, ஃப்ளைட் ரேடியோ டெலிபோன் ஆபரேட்டர்ஸ் லைசென்ஸ் பெறுவதற்கான தேர்வை எழுதவேண்டும்.

. இந்த லைசென்ஸ் பெற்றவர்கள் ஃப்ளையிங் கிளப் பயிற்சியாளரின் துணையுடன், சிறிய பயிற்சி விமானத்தை ஓட்டிப்பழகலாம். 20 மணி நேரப் பயிற்சிக்குப் பிறகு, தனியே விமானத்தை ஓட்டிக்காட்ட வேண்டும். தனியே விமானத்தை ஓட்டிக்காட்டுவதில் போதிய திறனை அடையவில்லை என்று பயிற்சியாளர் கருதினால் மேலும் 10 மணி நேரம் விமானத்தை ஓட்டிப்பழக வேண்டியிருக்கும். தனியே விமானத்தை ஓட்டிக்காண்பித்த பின்னரே, அடுத்த கட்டத்துக்குச் செல்ல முடியும், இதற்கிடையே ஏவியேஷன் மெட்ரியாலஜி, ஏர்ரெகுலேஷன், ஏர்நேவியேஷன் போன்ற சில பாடப்பிரிவுகளில் நடத்தப்படும் தேர்விலும் பாஸ் செய்ய வேண்டும்.

. பயிற்சியாளருடன் சேர்ந்தும், தனியாகவும் மொத்தம் 60 மணி நேரம் விமானம் ஓட்டும் பயிற்சியை முடித்தவர்கள், பி.பி.எல் எனப்படும் பிரைவேட் பைலட் லைசென்ஸ் பெறலாம். பொழுதுபோக்காக விமானம் ஓட்டவிரும்புகிறவர் களுக்கும், சொந்தமாக விமானம் வைத்திருப்பவர்களுக்கும் இந்த பி.பி.எல். லைசென்ஸே போதுமானது.

. சி.பி.எல். எனப்படும் கமர்ஷியல் பைலட் லைசென்ஸ் பெற்றவர்கள் மட்டுமே தொழில் ரீதியாக விமானங்களில் பைலட்டாகப் பணி புரிய முடியும். அதற்கு 200 மணி நேரம் விமானம் ஓட்டிப் பயிற்சி பெற்றிருக்க வேண்டியது அவசியம். ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்துக்கு விமானத்தை ஓட்டிச்செல்வது போன்ற பயிற்சிகளையும் பெற்றிருக்க வேண்டும். அத்துடன் எழுத்துத்தேர்வு உண்டு. இதிலும் தேர்ச்சி பெற்றால்தான் கமர்ஷியல் பைலட் லைசென்ஸ் பெற முடியம்.

. பயிற்சி தொடங்கியதிலிருந்து இரண்டு. மூன்று ஆண்டுகளுக்குள் இந்த லைசென்ஸைப் பெற்று விடலாம். விமானம் ஓட்டுவதற்கான இந்தத் தேர்வுகளை நடத்துவதும், லைசென்ஸ்களை வழங்குவதும் தில்லியில் உள்ள டைரக்டர் ஜெனரல் ஆஃப் சிவில் ஏவியேஷன் அமைப்பு தான்.

. இந்தியன் ஏர்லைன்ஸ் போன்ற விமான நிறுவனங்கள் பைலட் பணிக்கு ஆட்களைத் தேர்வு செய்து தங்களுக்குரிய விமானங்களை ஒட்டுவதற்குரிய சிறப்பு பயிற்சிகளை அளிக்கும்.

**கப்பல் போக்குவரத்து**

விமானப் போக்குவரத்து பெருகிவிட்டாலும் கூட, கப்பல் போக்குவரத்தும் தவிர்க்க முடியாத ஒன்றாகத் திகழ்கிறது. பெரும்பகுதியான சர்வதேச வர்த்தகம் கடல் வழி போக்குவரத்து மூலமே நடைபெறுகிறது. சரக்குக்கப்பலிலும், பயணிகள் கப்பலிலும் உலகம் முழுவதும் கடல் வழி மாக்கமாகப் பயணம் செய்யும் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகிறது. மெர்ச்சன்ட்நேவி பணிகள்,இதற்கான படிப்புகளைப் படித்த தகுதி படைத்த திறமையான மாணவர்களை கேம்பஸ் இன்டர்வியூ மூலம் வேலைக்கு எடுத்துக்கொள்கின்றன.

கப்பல் பணி சவாலும், சாகசங்களும் நிறைந்தது. தொடக்க நிலையில் ஊழியர்களாகப் பணிபுரியும்போது குடும்பத்தை விட்டுப்பிரிந்து பலமாத காலம் தனியே இருக்கவேண்டியிருக்கும் அதக்குரிய மனப்பக்குவத்தை வளர்த்துக்கொள்ளவேண்டும். தற்போது மூத்த நிலையில் உள்ள அதிகாரிகள், தங்கள் குடும்பத்தோடு கப்பலில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். சில மாதங்கள் தொடர்ச்சியாக வேலை பார்த்தால் அடுத்த ஓரிரு மாதங்களுக்கு முழு ஊதியத்துடன் கூடிய விடுமுறை கிடைக்கும் என்பது போன்ற சலுகைகள் உண்டு.

தொழில் வளர்ச்சி காரணமாக, கப்பல் போக்குவரத்தின் வளர்ச்சி விகிதம் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. 2010 ஆம் ஆண்டில் 46,000 கப்பல் பணி அதிகாரிகள் பற்றாக்குறை இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. எனவே

இப்படிப்புகளைப் படிப்பதற்கு மாணவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறார்கள். நல்ல சம்பளம், கூடவே மற்றவர்களுக்குக் கிடைக்காத உலகின் பல்வேறு நாடுகளைச் சுற்றிப் பார்க்கும் அரிய வாய்ப்பு.

**எங்கு படிக்கலாம் ?**

**ஏவியேஷன்** : கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாக சென்னையில் செயல்பட்டு வரும் மெட்ராஸ் ஃப்ளையிங் கிளப் பில் பைலட் ஆக பயிற்சி அளிக்கப்படுகிறது. எழுத்துத்தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் மாணவர்கள் வடிகட்டித் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

. தனியார் நிறுவனமான ஹிந்துஸ்தான் குரூப், பாண்டிச்சேரியில் 'ஓரியன்ட் ஃபைளட் ஸ்கூல்' நடத்தி வருகிறது.

. இவை தவிர, பல்வேறு மாநிலங்களில் அரசு சார்பில் நடத்தப்படும் ஃப்ளையிங் கிளப்புகள் பைலட் பயிற்சி அளிக்கின்றன. தனியார் நிறுவனங்கள் நடத்தும் ஃப்ளையிங் பயிற்சி நிலையங்களும் உண்டு.

**மெர்ச்சண்ட் நேவி** : மும்பையில் உள்ள, மத்திய அரசின் கல்வி நிறுவனமான டி.எஸ்.சாணக்யாவில் பி.எஸ்ஸி நாட்டிகள் சயின்ஸ் படிக்கலாம். ஐ.ஐ.டி. நுழைவுத் தேர்வு மூலமே மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்.

. கொல்கத்தாவில் உள்ள மரைன் இன்ஜினீயரிங் அண்ட் ரிசர்ச் இன்ஸ்டிடியூட்டில் மரைன் இன்ஜினீயரிங் படிக்கலாம். இந்தப் படிப்புக்கும் ஐ.ஐ.டி. நுழைவுத் தேர்வு எழுதிய மாணவர்களிலிருந்தே தேர்வு செய்யப்படுவார்கள்.

. மும்பை லால்பகதூர் சாஸ்திரி காலேஜ் ஆஃர் அட்வான்ஸ்ட் மாரிடைம் ஸ்டடீஸ் அண்ட் ரிசர்ச் போன்ற அரசுக்கல்வி நிறுவனங்களிலும் கப்பல் பணிகளுக்கான படிப்புகளைப் படிக்க வாய்ப்புகள் உள்ளன.

. சென்னை கிழக்குக் கடற்கரைச்சாலையில், உத்தண்டி என்னும் இடத்தில் நேஷனல் மாரிடைம் அகாடமி உள்ளது. இது மத்திய அரசு நிறுவனம், இங்கு பி.எஸ்ஸி. நாட்டிக்கல் சயின்ஸ் படிக்கலாம். இந்திரா காந்தி தேசியத் திறந்த நிலைப்பல்கலைக்கழகத்தின் மூலம் தேர்வு செய்யப்படும் மாணவர்கள் இங்கு மெர்ச்சன்ட் நேவி பயிற்சிப் படிப்புகளை அளிப்பதற்கு தமிழகத்தில் பல தனியார் கல்வி நிறுவனங்களும் உள்ளன.

- நன்றி : மனோரமா இயர்புக் 2009

❖❖❖❖❖

# டூரிஸம் அண்ட் ஹோட்டல் மேனேஜ்மெண்ட்

**உ**லகிலேயே அதிக அளவில் வளர்ச்சி பெற்று வரும் முக்கியத்துறை டிராவல் அண்ட் டூரிஸம். இந்தியாவில் காமன்வெல்த் விளையாட்டுப்போட்டிகள் நடைபெறும் 2010 ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறையில் 5.15 இலட்சம் வேலை வாய்ப்புகள் உருவாகும் என்று அசோசெம் அமைப்பு கணக்கிட்டுள்ளது. இதில் ஹோட்டல் துறையில் மட்டும் ஒன்றரை இலட்சம் வேலை வாய்ப்புகள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

உலகின் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தொழில்களில் ஒன்றான சுற்றுலாத் துறை இந்தியாவில் மட்டும் ஆண்டுக்கு ரூ. 20,000 கோடிக்கு மேல் அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிறது. இத்துறையில் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் ஏராளமான வேலை வாய்ப்புகள் உருவாகி வருகின்றன.

. பயணத்துக்குத் தேவையான விமான டிக்கெட் புக்கிங், தங்குவதற்கான ஓட்டல் அறைகள் ரிசர்வேஷன், சுற்றுலா செய்வதற்கான பயண ஏற்பாடுகள், சுற்றுலா பயணிகளுடன் சென்று வழிகாட்டுதல் என்று பல்வேறு நிலைகளில் பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

. டிராவல் ஏஜென்ஸிகள், டூர் ஆபரேட்டர்கள், விமானப் போக்குவரத்து நிறுவனங்கள், டிரான்ஸ்போர்ட் அண்ட் கார்கோ நிறுவனங்கள், அரசுச் சுற்றுலாத் துறை நிறுவனங்கள், டிராவல் கன்ஸல்டன்சி அமைப்புகள் போன்றவற்றில் வேலை வாய்ப்புகள் உள்ளன.

ஹோட்டல் மேனேஜ்மென்ட் அண்ட் கேட்டரிங் டெக்னாலஜி படித்த திறமையான மாணவர்களுக்கு கேம்பஸ் இன்டர்வியு மூலமே வேலை கிடைத்து விடுகிறது. எனவே, மாற்றுப் படிப்புகளைப் படிக்க நினைக்கும் மாணவர்களின் முக்கிய விருப்பமாக ஹோட்டல் மேனேஜ்மெண்ட் உள்ளது.

. சமையல் கலையை கற்றுத்தருவதுடன் சமைத்த உணவை கண் கவரும் விதத்தில் அலங்கரிப்பது எப்படி, அழகுபட பறிமாறுவது எப்படி, ஹோட்டலுக்கு வரும் வாடிக்கையாளர்களை இன்முகத்துடன் வரவேற்று உபசரிப்பது எப்படி என்பதையும் இந்தக் கல்வி நிறுவனங்கள் கற்றுத் தருகின்றன. ஹோட்டல் நிர்வாகம் சம்பந்தமான பாடங்களும் உண்டு.

. நல்ல தோற்றமும் தன்னம்பிக்கையுடன் பணிபுரிவதில் ஆர்வமும் நேரம் காலம் பார்க்காமல் வாடிக்கையாளர்களின் திருப்தி ஒன்றையே மனதில் கொண்டு மலர்ந்த முகத்தோடு வேலை செய்ய விரும்பும் இளைஞர்கள் இத்துறைப்படிப்புகளில் சேரலாம்.

. இத்துறையில் படித்த மாணவர்களுக்கு வெளிநாடுகளில் உள்ள பிரபல ஹோட்டல் மேனேஜ்மென்ட் அண்ட் கேட்டரிங் கல்வி நிறுவனங்களில் மேல் படிப்பு படிக்கவும் வாய்ப்புகள் உள்ளன.

- சுற்றுலாத்துறையின் பெரு வளர்ச்சி காரணமாக பெரு நகரங்களில் பெருகி வரும் சுற்றுலா இல்லங்கள். விருந்தினர் மாளிகைகள், நட்சத்திர ஓட்டல்கள், பீச் ரிசார்ட்டுகள், கப்பல் மற்றும் விமானப்போக்குவரத்து கேட்டரிங் சர்வீஸ்கள் போன்றவற்றில் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் அண்ட் கேட்டரிங் படிப்புகளைப் படித்தவர்களுக்குச் சிவப்புக் கம்பள வரவேற்பு உள்ளது.

**எங்கு படிக்கலாம் ?**

டூரிஸம் அண்ட் டிராவல் துறையில் தகுந்த பயிற்சிகளை அளிக்க பல கல்வி நிறுவனங்கள் உள்ளன.

- குலாலியரில் உள்ள இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டூரிஸம் அண்ட் டிராவல் மேனேஜ்மெண்ட் நிறுவனத்தில் பி.டி.எம். ஆனர்ஸ் படிக்கலாம். இந்த மூன்று ஆண்டு படிப்பில் பிளஸ் டு படித்த மாணவர்கள் சேரலாம். எழுத்துத் தேர்வு, குரூப் டிஸ்கஷன், நேர்முகத்தேர்வு அடிப்படையில் மாணவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள்.
- இன்டர்நேஷனல் ஏர்டிரான்ஸ்போர்ட் அசோசியேஷன் (ஐ.ஏ.டி.ஏ.) யுனிவர்சல் ஃபெடரேஷன் ஆஃப் டிராவல் (யு.எஃப்.டி.ஏ.ஏ.) ஆகிய அமைப்புகளும் சுற்றுலா தொடர்பான பணிகளில் சேருவதற்கு உதவும் தேர்வுகளை நடத்துகின்றன.
- சான்றிதழ் மற்றும் டிப்ளமோ படிப்புகளை வழங்கும் தனியார் நிறுவனங்களும் உண்டு. தமிழகத்தில் உள்ள சில கல்லூரிகளில் பி.எஸ்.சி. டிராவல் அண்ட் டூரிஸம், பி.ஏ.வரலாறு மற்றும் சுற்றுலா பி.ஏ. டூரிஸம் அண்ட் டிராவல் மேனேஜ்மெண்ட் போன்ற படிப்புகள் உள்ளன.
- ஹோட்டல் மேனேஜ்மெண்ட் : மத்திய அரசின் சுற்றுலாத் துறை சார்பில் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் கேட்டரிங் டெக்னாலஜி அண்ட் அப்ளைடு நியூட்ரிஷன் கல்வி நிலையங்கள் சென்னை தரமணி உள்பட 24 நகரங்களில் நடத்தப்படுகின்றன. இங்கு பி.எஸ்.சி. ஹாஸ்பிடாலிட்டி அண்ட் ஹோட்டல் அட்மினிஸ்ட்ரேஷன் என்னும் மூன்று ஆண்டு படிப்பைப் படிக்கலாம். இதற்கான பட்டங்களை இந்திராகாந்தி தேசியத் திறந்தநிலைப் பல்கலைக்கழகம் வழங்கும்.
- தமிழக அரசின் நிதியுதவியுடன் திருச்சி துவாக்குடியில் ஃபுட் கிராஃப்ட் இன்ஸ்டியூட் இயங்கி வருகிறது. இது தவிர, தொழில்நுட்பக்கல்வி இயக்கத்தின் அங்கீகாரத்துடன் நடத்தப்படும் டிப்ளமோ படிப்புகளும், பல்கலைக்கழகங்களின் கீழ் இயங்கும் கல்லூரிகளில் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் படிப்புகளும் உள்ளன.

- நன்றி : மனோரமா இயர்புக் 2009

❖❖❖❖❖

# உறவுகள் மேம்பட....

குடும்பத்திலும் சரி அலுவலகத்திலும் சரி மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க....

. நானே பெரியவன் நானே சிறந்தவன் என்ற அகந்தையை (EGO) விடுங்கள்.
. அர்த்தமில்லாமலும், பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள் (Loose Talks).
. எந்த விஷயத்தையும்,. பிரச்சனையையும் நாசூக்காக கையாளுங்கள், விட்டுக்கொடுங்கள் (Compromise).
. சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள் (Tolerance).
. நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள் (Adamant Argument) குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள் (Narrow Mindedness).
. உண்மை எது. பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள். (Carrying Tales).
. மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள். (Superiority Complex)
. அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள் (Over Expectation)
. எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும் அவர்களின் சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக்கொண்டிருக்காதீர்கள்.
. கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்.
. அற்ப விஷயங்களைப் பெரிது படுத்தாதீர்கள்.
. உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக்கொள்ளுங்கள் (Flexibility).
. மற்றவர் கருத்துக்களை, செயல்களை, நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள் (Misunderstanding).
. மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும், இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள். (Courtesy)
. புன்முறுவல் காட்டவும் சிற்சில் அன்புச் சொற்களை சொல்லவும் கூடநேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
. பேச்சிலும், நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்துஅடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.
. அவ்வப்போது நேரில் சந்தித்துமனம் திறந்து பேசுங்கள்.
. பிரச்சனைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கிவரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள்.

– வேதாத்திரி மகரிஷி

# கொங்கு திருமண மாலை

திருமணத்தகவல் மையம், சென்னை

**மணமகள் தேவை**

பெருங்குடி கூட்டம், 34 வயது M.Sc., , பெங்களூரில் வங்கி உதவி மேலாளர் - 5'11'' - மாநிறம், அகபதி நட்சத்திரம், செவ்வாய் இல்லை, உடன்பிறப்பு, 2 தங்கைகள், தந்தை கிருஷ்ணகிரியில் வழக்கறிஞர். டாக்டர், பொறியாளர், தொழில் கல்வி பட்ட மேற்படிப்பு, பெங்களூர்மற்றும் சென்னையில் வேலை செய்யும் பெண் தேவை

**மணமகன் தேவை**

பெருங்குடி , 31வயது BDS படிப்பு, 5'5'' சிகப்பு, பெங்களூரில் மருத்துவர் வேலை, ரோகினி, 4 - செவ்வாய் இல்லை, 1 அண்ணன், 1 அக்கா. டாக்டர், பொறியாளர், தொழிற்கல்வி பட்டம், பெங்களூர் / சென்னையில் வேலைசெய்யும் மாப்பிள்ளை தேவை.

தொடர்புக்கு
டி.கே.சுப்ரமணியன்,
60, மேகசின் சாலை, பட்ரோடு, பரங்கிமலை, சென்னை - 600 016
தொ.பே. : 044-22311411, 98403 64348

❖❖❖❖❖

# மணமகன் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | கே. பூர்ணா பிரியா |
| படிப்பு | : | M.Sc., MS (USA) |
| பிறந்த தேதி | : | 30-01-1984 |
| வேலை | : | கம்ப்யூட்டர் அனலிஸ்ட் |
| உயரம் | : | 5.2'' |
| நிறம் | : | சிவப்பு |
| நட்சத்திரம் | : | பூராடம் |
| ராசி | : | தனுசு |
| குலம் | : | வெண்டுவன் |
| உடன்பிறந்தோர் | : | ஒரு தங்கை |
| உகந்த மணமகன் | : | USA வில் MS படித்து USA வில் வேலையில் இருப்பவர் |
| விலாசம் | : | திரு. S.கதிரேசன் குமாரபாளையம், (PO) கல்தான் பேட்டை (Via) சூலூர், (Tk), கோவை (DT) |
| மொபைல் நம்பர் | : | 99424 66343 |

## வாழ்த்துகிறோம்

தமிழ்நாடு காவல்துறையில் கொங்கு சிங்கமாகத் திகழும், சென்னை மாநகர காவல்துறையில் Joint Commissioner ஆகப் பணியாற்றும் திரு, M.ரவி IPS அவர்களின் அருமை மகள் செல்வி அனன்யா ரவி (Ananya Ravi) பாலவித்தியா மந்திர், அடையாறு பள்ளியில் படித்து CBSE 10 வது வகுப்பில் 500 க்கு 475 (475/500) மார்க்குகள் எடுத்து சாதனை படைத்துள்ளார். இது நமது கொங்கு சமுதாயத்திற்கு ஒரு சிறப்பு . செல்வி அனன்யா ரவி அவர்கள் மேலும் பல வெற்றிகள் பெற நமது சங்கத்தின் வாழ்த்துக்கள். சாதனை மதிப்பெண்கள் பெற்ற செல்வி அனன்யா ரவியை சங்கம் பாராட்டி மகிழ்கிறது.

❖❖❖❖

## வாழ்த்துகிறோம்

திரு. M.ரவி IPS அவர்களின் அண்ணன் திரு. M.செந்தமிழ் செல்வன் அவர்கள் கூட்டுறவுத்துறையில் கூடுதல் பதிவாளராக, தற்போது Special PA to Minister for Cooperation ஆகப் பணியாற்றுகின்றார். இவருடைய அன்பு மகன் இவிரா (Eevera) அவர்கள் மகரிஷி வித்தியாலயாவில் +2 படித்து I.I.T. ல் சேர தேர்ச்சி பெற்றுள்ளார். இந்தியாவில் I.I.T. நுழைவுத் தேர்வுக்கு 3½ லட்சம் மாணவர்கள் தேர்வு எழுதி, 10,000 பேர் தேர்வு பெற்றதில், இவர் 783 Rank வாங்கி தேர்ச்சி பெற்றுள்ளார் என்பது நமது சமுதாயத்திற்கு பெரும் பெருமை சேர்ப்பதாகும். செல்வன் இவிரா அவர்களுக்கு நமது சங்கத்தின் பாராட்டு. செல்வன் இவிரா மேலும் பல வெற்றிகள் குவிக்க சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

❖❖❖❖

# யாவரும் கேளிர்

- கொங்கு மாமணி புலவர் செ.இராசு. ஈரோடு

நமது நாட்டில் சாதி மாத வேறுபாடுகளைச் சிறிதளவும் என்றுமே கருதாத சமரச சமுதாயம் கொங்கு வேளாளர் சமுதாயமேயாகும். தங்களிடம் பல்வேறு பணிகள் புரியும் பிற இனத் தொழிலாளர்களைப் "பணிமகன்" என்று தம் மக்களைப்போல் பாவித்து அழைத்தவர்கள் கொங்கு வேளாளர்கள்.

நாவிதர்களை "குடிமகன்", என்றும், "மங்கலன்" என்றும் அழைத்ததோடு அல்லாமல் அவர்களின் தொழில் கருவியால் "சக்கரைக்கத்தி" என்று அவர்களை அழைத்து மகிழ்ந்தது கொங்கு வேளாளர் சமூகம். கம்பர் பாடியதாகக் கருதப்பெறுகின்ற மங்கல வாழ்த்தைப் பாடும் உரிமையை மணமேடையில் அவர்கட்கு அளித்துள்ளது கொங்கு வேளாளர் சமுதாயம்.

துணி வெளுக்கும் வண்ணார், பண்ணையத்தில் வேலை செய்யும் தாழ்த்தப்பட்டவர்கள் இவர்களை முறையே "ஏகாலியர்" மாதிகன்" என்ற பெயர் குறிப்பிட்ட சமூகம் கொங்குச் சமூகம். குயவர்களை "மண்ணுடையார்" என்று மரியாதையோடு அழைத்தது மட்டுமல்ல ஆவணங்களில் அவர்களைக் "கொங்குத் திருநீலகண்டர்" என்று குறித்த சமுதாயம் கொங்குச் சமுதாயம்.

காட்டை அழித்து விளைநிலம் ஆக்கி வேளாண்மை செய்த வேளாளர்கட்கும். காட்டில் வேட்டைத் தொழில் நடத்திய வேட்டுவர்கட்கும் கொங்கு நாட்டில் தொழில் முறைப்போராட்டங்கள் நடைபெற்றன. இருப்பினும் வேட்டுவ சமுதாயத்தினரை "வாழரசமணவாளர்" என அழைத்ததுடன், "கும்பிட்டாரை வெட்டாத குருகுல வம்சம்" என்றும் புகழ்ந்துள்ளனர். வேட்டுவர் சமுதாயத்தோடு சேர்ந்து பல அறச்செயல்களை நடத்தியதுடன் வேளாளர்கள் தங்களுக்குக் கோயில்களை அளித்த வேட்டுவ சமுதாயத்தினருக்கு "முப்பாடு" என்னும் முதல் உரிமையைப் பல கோயில்களில் அளித்து மகிழ்ந்தனர். வேட்டுவர் சமூகத்தலைவர்களான அப்பிச்சிமார், இராக்கியண்ணன் முதலியவர்களைக் கொங்கு வேளாளர்களும் பல இடங்களில் தெய்வமாகப்போற்றி வழிபட்டு வருகின்றனர்.

முத்தூர், வேலம்பாளையம், பூந்துறைச் சேமூர் போன்ற பல ஊர்களில் கொங்கு வேளாளங்கள் வழிபடும் "குப்பியண்ணன்", பல கோயில்களில் வழிபடப்பட்டுவரும் "வீரசாம்புவன்" பறையர்சமூகம் சார்ந்த அருளாளர்கள். காஞ்சிக் கோயில், காகம் முதலிய ஊர்களில் கண்ணகுலப் பெருமக்கள் குலதெய்வமாக வழிபடும் "இராவுத்தனசுவாமி" இசுலாமியப்பெரியவர். "டில்லி பட்டாணித் துலுக்கா" என்று சுவடி

கூறுகிறது. காணி பெற்றுத்தந்த இசுலாமிய சர்தாருக்கு நன்றிக் கடன் காட்டத் தங்கள் ஆண் குழந்தைகட்குக் குறிப்பிட்ட வயதுவரை இசுலாமியப் பழக்க வழக்கத்தை ஏற்று காது குத்தாமல் இருப்பதால் காடையூர் பொருளந்தை குலத்தார் தங்களை "முழுக்காது குலம்" என்று அழைத்துக் கொள்கின்றனர்.

கொங்கு வேளாளர் குல தெய்வக்கோயில் வளாகத்தினுள் பற்பல பிற சமூகப்பெரியவர்கள் இறைபடிமங்களாக எழுந்தருள்விக்கப்பட்டு வழிபடப்பட்டு வருகின்றனர். பழையகோட்டை பட்டக்காரர், பயிர குலத்தார் குல தெய்வமான ஆனூர் அம்மன்கோயிலில் "செல்லமூப்பன்" வழபாட்டில் உள்ளது ஒரு எடுத்துக்காட்டு, இன்று வருடத்திற்கு ஓரிரு நாட்கள் விளம்பரத்திற்காகச் "சமபந்தி விருந்து" என்று புகைப்படம் எடுத்துக்கொள்கின்றனர். ஆனால் கொங்கு வேளாளர் தலைவர் இல்லங்களில் இது எப்பொழுதும் நடைபெறுவதுதான்.

"பண்டு பறையன் என்று பாராமல் கூடவைத்து
உண்டு புகழ்படைத்த"

தலைவர்கள் பலர்.

கொங்கு வேளாண் பெருமக்கள் 18 வகையான குடிபடைகளை ஆதரித்து அவர்கட்குப் படிகளில் அளக்காமல் தானியம் அடிக்கும் களத்திலேயே "கொங்குமுறம்" கொண்டு அளந்து கொடுத்துப் பொதுவுடைமைச் சமுதாயமாக வாழ்ந்த சமுதாயம் கொங்குச் சமுதாயம். திருமண வீடுகளில் அவர்கள் 18 பேருக்கும் பரிவட்ட மரியாதை செய்து உணவு படைத்துப் புத்தாடை வழங்கிப் பரிசளிப்பர். அந்தப் பதினெட்டுக்குடிபடைகளையும் பழம்பாடல் தொகுத்துக் கூறுகிறது.

தொண்டைமண் டலவரிசை நாலாறு கோட்டமும்
சோழநாள் முதலாகவே
சொல்பெரிய நாவிதன் குயவன்வண் ணான்ஒலை
சொன்னபடி எழுதும் உவச்சன்

கண்டதொரு கண்ணாளர் ஐவர் வாணியர் மூவர்
கந்தமணி மாலைகாரன்
கலைமீது சரடோட்டு பாணனும் தலைக்குளம்
காவலாகிய வலைஞனும்

பண்டுமுத லாய்ஊரார்க்குக் கண்டுமே உரைத்திடும்
பறையனொடு பள்ளனுடனே

பதினெண்பேர் மணவறையில் மாகாணம் அளவுபோய்
பணிசெய்து பகரும்முறையால்

கொண்டு பரிவட்டம் கட்டியே மிகவாகை
கூறும்வே ளாளருக்கு
குவலயம் தன்னிலே கச்சியே கம்பர்தன்
குமுதத்தில் இட்ட வரியே !

சங்கப்புலவர் கூறும் “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற தொடர்களைப் பொன்னேபோல் போற்றி வாழ்வில் அன்றும் - இன்றும் கடைப்பிடிப்பவர்கள் கொங்கு வேளாளர்கள்.

- அடுத்த இதழில் “வள்ளுவர் வழி வாழ்ந்தோர்”

❖❖❖❖❖

## வருந்துகிறோம்



நாமக்கல் மாவட்டம் பேளுக்குறிச்சி வெள்ளாளப்பட்டி கிடாயர் தோட்டத்தைச் சேர்ந்தவரும், நமது சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் மற்றும் அத்தியப்பா கெமிகல்ஸ் பிரைவேட் லிமிடெட், எல்லாக்கெம் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், ஸ்ரீ தைரிய லட்சுமி பாலிசேக்ஸ் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் தலைவர் திரு. K.A.கணபதி அவர்களின் தந்தையாருமான திரு. K.A.அத்தியப்ப கவுண்டர் அவர்கள் தமது **85** ஆவது வயதில் 20-06-2009 அன்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரது பிரிவால் வாடும் திரு. K.A.கணபதி, மருமகள் திருமதி K.G.கனகம், மகள்கள் திருமதி சரசுவதி முத்துக்கவுண்டர், திருமதி கமலம் வரதப்பன், திருமதி வடிவழகி நல்லியப்பன், பேரன் K.G.ஜோதீஸ்குமார், பேத்திகள் K.G.யுவராணி ஜெயகார்த்திக், K.G.தீபராணி ராஜேஸ் மற்றும் குடும்பத்தார்க்கு சங்கம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த திரு. அத்தியப்பக் கவுண்டர் அவர்களின் ஆன்மா சாந்தியடைய பிராத்திக்கிறோம்.

❖❖❖❖❖

# வாழ்த்துகிறோம்



கடந்த 21-06-2009 ஞாயிறு அன்று திருப்பூரில் சிந்தனைக் கவிஞர் கவிதாசன் அவர்களின் “தொட்டுவிடும் தூரம்தான் வெற்றி” மற்றும் “வானம் தொடலாம் வாங்க” ஆகிய இரண்டு புதிய நூல்கள் வெளியீட்டு விழா நடைபெற்றது.

மேற்படி நூல்களை திருப்பூர் காவல்துறை கண்காணிப்பாளர் செல்வி. S.சாந்தி அவர்கள் வெளியிட, ஜெய்விஷ்ணு ஸ்பின் டெக்ஸ் (பி) லிட்., ன் நிர்வாக இயக்குனர் திரு. K.M.சுப்ரமணியன் முதல் பிரதிகளைப் பெறுகிறார். அருகில் திரு.எம்பரர். பொன்னுசாமி மற்றும் மெஜஷ்டிக் தியாகராஜன் உள்ளனர்.

❖❖❖❖❖

**Sriraksha**

**(A wing of MLA)
Counseling and
Mediation Centre**

**10/12, A.K.Illam 8th Street,
Dr. Radha Krishnan Salai,
Mylapore,
Chennai - 600 004.**

The centre is open for men, women & children facing the family issues such as

- Domestic Violence
- Divorce & Post Divorce Counseling
- Maintenance
- Dowry Harassments
- Adoption
- Eve-teasing
- Women affected by sexual harassment at work place etc.,

**MOBILE 98410 14926
98849 68103**

# வாழ்த்துகிறோம்

நம் கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர் பேராசிரியர் சி.சுப்பிரமணியம் அவர்களின் மனைவியும், பச்சையப்பன் கல்லூரியின் கணிதத் துறைத் தலைவருமான



திருமதி R.ருக்மணி அவர்கள் பச்சையப்பன் கல்லூரியின் புதிய முதல்வராகப் பொறுப்பேற்றுள்ளார். இவரது சொந்த ஊர் நாமக்கல் ஆகும். 167 ஆண்டு பழமைவாய்ந்த பச்சையப்பன் கல்லூரி வரலாற்றிலேயே முதன் முதலாக கொங்கு இனத்தைச் சார்ந்த ஒருவர் முதல்வராகிறார் என்ற பெருமையைப் பெறுகிறார். அத்துடன் முதல் பெண் முதல்வர் என்ற பெருமையும் இவரையே சாரும். பச்சையப்பன் கல்லூரியில் 1980 ஆண்டு விரிவுரையாளராக சேர்ந்தபொழுதும் இவரே அத்துறையில் பொறுப்பேற்ற முதல் பெண்மணியாவார். இவர் கடலூர் கந்தசாமி நாயுடு கல்லூரி, காஞ்சி பச்சையப்பன் கல்லூரி, செல்லம்மாள் மகளிர் கல்லூரி இவைகளிலெல்லாம் பணியாற்றியபின் சென்ற ஆண்டு வரை பச்சையப்பன் கல்லூரியின் கணிதத்துறைத் தலைவராகப் பணியாற்றிவந்தார். சென்ற ஆண்டு பச்சையப்பன் கல்லூரியின் மாலைநேரக்கல்லூரி முதல்வராகப் பொறுப்பேற்று சிறந்த முறையில் பணியாற்றி, கல்லூரி நிர்வாகத்தின் பாராட்டைப் பெற்றிருந்தார். இப்பொழுது முதல் பெண்முதல்வர் என்ற நிலையில் பல நிர்வாகச் சீர்திருத்தங்களைச் செய்வார் என்ற எதிர்பார்ப்பு எல்லார் மனதிலும் உள்ளது. இவரது கணவர் திரு. சி.சுப்பிரமணியம் சென்னை பிரசிடென்சி கல்லூரியில தமிழ்ப்பேராசிரியராகச் சிறப்பாகப் பணியாற்றி ஓர்வு பெற்றவர். தமிழில் நல்ல புலமை பெற்றுள்ள இவர் பல நூல்களை எழுதியுள்ளார். இத்தம்பதியரின் சு.அசோக் குமார், சு.சுமன் என்ற இரு மகன்களும் அமெரிக்காவில் பொறியாளர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

பெருமைமிகு பொறுப்பை ஏற்றுள்ள, ஆற்றலும் திறமையும் மிக்க திருமதி ருக்மணி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖❖❖

# வாழ்த்துகிறோம்

கோவை திரு. எஸ்.பி.பாலசுப்பிரமணியம் - திருமதி பி.பிரபாவதி தம்பதியரின் மகளான செல்வி பா.நந்தினி **2009** பத்தாம் வகுப்புத்தேர்வில் **600** க்கு **481** மதிப்பெண்கள் பெற்று கோவை கொங்கு மண்டலத்தில் உள்ள ஆங்கிலோ இந்தியன் பள்ளிகளில் மாவட்டத்தில் இரண்டாம் இடமும், ஆங்கிலத்தில் மாநிலத்தில் இரண்டாம் இடமும், கோவை புனித பிரான்சிஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப்பள்ளியில் முதல் இடமும் பெற்று சாதனை படைத்துள்ளார்.

கரூர் திரு பி.ஆறுமுகம் அவர்களது மகனும் கரூர் வெண்ணமலை சேரன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவனுமான செல்வன் ஏ.பிரவீன் +2 தேர்வில் **1200** க்கு **1183** மதிப்பெண்கள் பெற்று, மாநிலத்திலேயே முதலாவது இடம் (State First Rank) பிடித்து சாதனை புரிந்துள்ளார்.

பெருந்துறை அருகில் உள்ள பொன்முடி கிராமத்தைச் சேர்ந்த திரு.பி.முருகசாமி - திருமதி எம்.பூங்கொடி தம்பதியரின் மகனும், விஜயமங்கலம் பாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவனுமான செல்வன் எம்.லிங்கேஸ்வரன், **2009** ஆம் ஆண்டு +2 தேர்வில் **1200** க்கு **1183** மதிப்பெண்கள் பெற்று, மாநிலத்திலேயே முதலாவது இடம் (State First Rank) பிடித்து சாதனை புரிந்துள்ளார்.

கோவை திரு. க.அருள் - திருமதி காந்திமதி தம்பதியரின் மகனும், ஈரோடு , திண்டல் பாரதி வித்யா பவன் மெட்ரிக்மேல்நிலைப்பள்ளி மாணவனுமான செல்வன் அ.சிவசங்கர் +2 தேர்வில் **1200** க்கு **1170** மதிப்பெண்கள் பெற்றுள்ளார். புள்ளியியல் பாடத்தில் 200/200 பெற்று தமிழகத்தின் முதன்மை மாணவனாக தகுதி பெற்று சாதனை படைத்துள்ளார்.

பத்தாம் வகுப்பில் சாதனை படைத்துள்ள செல்வி பா.நந்தினி, +2 தேர்வில் சாதனைகள் புரிந்துள்ள செல்வன் ஏ.பிரவீன், செல்வன் எம்.லிங்கேஸ்வரன் மற்றும் செல்வன் அ.சிவசங்கர் ஆகியோருக்கும், அவர்கள் இச்சாதனைகளை நிகழ்த்த ஊக்குவித்த அவர்களது பெற்றோர்களுக்கும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துக்களையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது.

❖❖❖❖❖

# நூல் நயம்

நூல் : நினைவலைகள்

ஆசிரியர் : கவிஞர் இலட்சுமி வாசுதேவன்

வெளியீடு : கலைஞர் பதிப்பகம், சென்னை - 17

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மிக உயரிய பதவியான மின்வாரிய தொழில்நுட்ப உறுப்பினர் பதவியை வகித்து மிகச்சிறப்பாகப் பணியாற்றி, கொங்கு சமுதாயத்திற்குப் பெரும் பெருமை சேர்த்தவர் திரு. கே.எம். வாசுதேவன் அவர்கள் ஆவார். மேட்டூர் அனல்மின் நிலையம், வடசென்னை அனல்மின் நிலையம் - இந்த இரண்டு திட்டங்களையும் வெற்றிகரமாக நிறைவேற்றியதில் இவருக்குப் பெரும் பங்குண்டு. தமிழகம் ஒளி பெற பல திட்டங்களைக் கொடுத்து, அரும்புகழ் கொண்டவர். இத்தனை சிறப்பு பெற்ற, நேர்மையான, விளம்பர வெளிச்சம் படாமல்ஒதுங்கி நிற்கும் மனித நேய மாண்பாளர் திரு வாசுதேவன் அவர்களின் அருமை மனைவி கவிஞர் இலட்சுமி வாசுதேவன் அவர்கள் படைத்துள்ள சிறப்பான கவிதை நூல் தான் நினைவலைகள்.

கவிக்குயில் சௌந்தரா கைலாசம், கவிஞர் மனோன்மணி மாணிக்கவாசகம் போன்றவர்கள் கொங்கு சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்துவரும் பெண் கவிஞர்கள். இந்த வரிசையில் இணைந்திருப்பவர் தமிழன்னைக்கு அணிகலனாய் அழகியதொரு கவிதை நூலைப் படைத்திருக்கும் கவிஞர் இலட்சுமி அவர்கள். இந்நூல் ஆசிரியரின் முதல் கவிதைத் தொகுப்பு.

அன்னை, தந்தை, குருமார்கள். உடன்பிறந்தோர், குழந்தைகள் ஆகியோருடன் ஏற்பட்டஇன்ப அனுபவங்களையும், வாழ்வில் சந்தித்த மறக்க முடியாத நிகழ்ச்சிகளையும், எண்ணங்களையும், எழில் கொஞ்சும் கவிதைகள் மூலம் சீரிய முறையில் வெளிப்படுத்தியுள்ளார். அனைத்துக்கவிதைகளும் எளியனவாகவும், இனியனவாகவும், உயிர்த்துடிப்பு கொண்டனவாகவும் உள்ளன. பல கவிதைகள் உணர்ச்சிப்பிழம்பாக உள்ளன. படிப்போர் நெஞ்சங்களைக் கொள்ளை கொள்வதாக உள்ளன. “என் எண்ணங்களை எல்லாம் வடிவான எழுத்தாக்கி ஏட்டில் நான் கொண்டு வர இயலவில்லை என்ற மனப்பாரம் பாங்காய் நீ தீர்ப்பது என்றோ” என்று எழுதிய கவிஞர் இன்று முண்டகக்கண்ணி அன்னை அருளாசியுடன் அழகிய முறையில் இக்கவிதை நூலை எழுதிவெளியிட்டுள்ளார்.கொங்கு மணம் கமழ கருத்தோவியம் தீட்டியுள்ள கவிஞர் இலட்சுமி மேலும் பல நூல்களை எழுதி வெளியிட்டால் கொங்கு சமுதாயம் மேலும் பெருமை பெறும் என்பதில் ஐயமில்லை.

- முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்

செயற்குழு உறுப்பினர்

❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்



தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டியைச் சேர்ந்தவரும், PDR கல்வி நிறுவனங்களின் தலைவரும், தமிழ்நாடு தனியார் கல்வியியல் கல்லூரிகள் சங்கத்தலைவரும், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய முன்னாள் உறுப்பினருமான திரு. இரா. தமிழ்மணி அவர்கள் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றக்குழு உறுப்பினராக (Syndicate Member) தமிழக ஆளுநர் அவர்களால் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவருடைய பதவி காலம் மூன்று ஆண்டுகள் ஆகும்.

சங்கத்தன் மூத்த உறுப்பினரான திரு. தமிழ்மணி தமிழ்ப்பணி, கல்விப் பணி சமுதாயப்பணி, சமூகப்பணி ஆகியவற்றில் தீவிரமாக ஈடுபட்டு தமது சேவைகள் மூலம் கொங்கு சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்து வருபவர் என்பதோடு சங்கத்தின் கொங்கு சாதனையாளர் விருது பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. திரு. தமிழ்மணி அவர்களுக்கு சங்கம் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

## 2009 ஆம் ஆண்டு விளையாட்டு விழா மற்றும் போட்டிகள்

இந்த ஆண்டு 16-08-2009 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள குடும்பவிழாவை முன்னிட்டு பெண்கள், மாணவ,மாணவியர் மற்றும் குழந்தைகளுக்கான பாட்டுப்போட்டி, நடனப்போட்டி, பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டி, கோலப்போட்டி, மாறுவேடப்போட்டி முதலான போட்டிகள் 12-07-2009 ஞாயிற்றுக்கிழமையன்று வெள்ளிவிழா இல்லத்தில் காலை 9 மணி முதல் நடைபெற உள்ளன. போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

28-06-2009 அன்று நடைபெறுவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பேச்சுப்போட்டியும் 12-07-2009 அன்று நடைபெறும். தலைப்பில் மாற்றம் இல்லை.

தொடர்பு : செயற்குழு உறுப்பினர்கள்
முனைவர் மணிமேகலை புஷ்பராஜ், 9444777700
புலவர் உத்தமி பொன்னுசாமி, 93813 99499

❖❖❖❖❖